# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

# ஆண்டு 9

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 16

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. ஆடலின்போது கலைஞர் வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகளின் எண்ணிக்கை
   1. ஆறு
   2. ஏழு
   3. எட்டு
   4. பத்து

2. புறாவுக்காகத் தன் தசையை வெட்டிக் கொடுத்த மன்னன்
   1. சிபி
   2. எல்லாளன்
   3. நெடுஞ்செழியன்
   4. சங்கிலியன்

3. கிளியின் இளையது பிள்ளை போல கோழியின் இளையது
   1. கன்று
   2. பிள்ளை
   3. குஞ்சு
   4. குட்டி

4. உருவக அணியின் உருபுகள்
   1. ஆன, ஆகிய
   2. ஒத்த, புரைய
   3. போன்ற, ஒப்ப
   4. ஆல், ஒடு

5. வைணவ வழிபாட்டைப் போற்றியோர்
   1. ஆழ்வார்கள்
   2. சமணர்கள்
   3. பௌத்தர்கள்
   4. நாயன்மார்கள்

6. அடவி என்பதன் ஒத்தபொருள்
   1. மனை
   2. காடு
   3. நிலம்
   4. புவி

7. பாட்டுப் பாடும் ஆண்களைக் குறிக்கும் சொல்
   1. பாடினியர்
   2. கூத்தர்
   3. பாணர்
   4. விறலியர்

8. கீழே தரப்பட்டுள்ளனவற்றுள் பெயர்ப்பகுசொல்
   1. வந்தாய்
   2. நிலம்
   3. அறிஞன்
   4. எடுத்தனர்

9. தமிழ்நாட்டில் வடமொழிக் கல்வி எழுச்சி பெற்ற காலம்
   1. கி.மு. 3ஆம் நூற்றாண்டு
   2. கி.பி. 3-6ஆம் நூற்றாண்டு
   3. கி.பி. 6-9ஆம் நூற்றாண்டு
   4. கி.பி. 16-20ஆம் நூற்றாண்டு

10. மிக மகிழ்தல் என்ற பொருளைத் தரும் மரபுத்தொடர்
   1. தோள்கொடுத்தல்
   2. உச்சிகுளிர்தல்
   3. காலாறுதல்
   4. செவிமடுத்தல்

11. வெயிலின் அருமை நிழலில்
   1. தெரியாது
   2. தெரியவில்லை
   3. தெரியும்
   4. தெரிவதில்லை

12. கோவலன் கொலை செய்யப்பட்ட இடம்
   1. பூம்புகார்
   2. மதுரை
   3. வஞ்சி
   4. சென்னை

13. வாழ்ந்தன என்ற பகுசொல்லின் பகுதி
   1. வாழ்ந்த
   2. வா
   3. வாழ்ந்
   4. வாழ்

14. சிலப்பதிகாரத்தினது கதைக்களங்களுள் ஒன்று
   1. ஈழநாடு
   2. சோழநாடு
   3. வடநாடு
   4. மலையகம்

15. தாளத்துக்கும் இசைக்கும் ஏற்றவாறு உடலை அசைக்கும் கலை
    1. ஓவியம்
    2. சிற்பம்
    3. பாடல்
    4. ஆடல்

16. அஃறிணை, பலவின்பால், பன்மை, படர்க்கை என்பன பொருந்தும் சொல்
    1. வந்தேன்
    2 வந்தது
    3. வந்தாள்
    4. வந்தன

17. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
    1. நந்திக்கலம்பகம்
    2. திருக்குறள்
    3. மணிமேகலை
    4. நாலடியார்

18. இயற்கையைப் பேணுவோம்! இதில் மறைந்துள்ள சொல்லிய உறுப்பு
    1. அடைமொழி
    2. எழுவாய்
    3. பயனிலை
    4. செயப்படுபொருள்

19. பார்த்தனான் என்ற சொல் பேச்சுவழக்கில் உள்ளது. இதன் எழுத்துவழக்கு
    1. பார்ப்பேன்
    2. பார்க்கிறேன்
    3. பார்த்தேன்
    4. பார்த்தோம்

20. எளிமையாக விளங்கிக் கொள்ளக் கூடிய கவிதைகள்
    1. மரபுக்கவிதைகள்
    2. புதுக்கவிதைகள்
    3. நெடும்பாடல்கள்
    4. செய்யுள்கள்

21. பால் + சோறு என்பதைப் புணர்த்தி எழுதினால்
    1. பால்சோறு
    2. பாற்சோறு
    3. பால்ச்சோறு
    4. பால்றசோறு

22. மேடுபள்ளம் என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. இரட்டைக்கிளவி
    3. அடுக்கிடுக்குத்தொடர்
    4. இணைமொழி

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

23. தமிழுக்குக் கிடைத்த பொன்னாரம் எனப் போற்றப்படும் இலக்கியம்
   1. புறநானூறு
   2. சிலப்பதிகாரம்
   3. முத்தொள்ளாயிரம்
   4. ஆத்திசூடி

24. கரகாட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் பொருள்
   1. தடி
   2. கோல்
   3. செம்பு
   4. காவடி

25. எடுத்தனர் என்ற பகுசொல்லில் வந்துள்ள இடைநிலை
   1. ன்
   2. இன்
   3. ற்
   4. த்

26. நானிலங்களை உள்ளடக்கிய ஒரு பட்டினம்
   1. அநுராதபுரம்
   2. மன்னார்
   3. கொழும்பு
   4. திருகோணமலை

27. மாந்தர் நிலநெய்யைப் பெறும் இடங்களுள் ஒன்று
   1. வானம்
   2. மரம்
   3. ஆழ்கடல்
   4. குளம்

28. உடம்படுமெய் எழுத்துகள்
   1. மூன்று
   2. நான்கு
   3. இரண்டு
   4. ஒன்று

29. இமயமலையிலிருந்து கல்லெடுத்து கண்ணகிக்குச் சிலையமைத்த மன்னன்
   1. அதியமான்
   2. நெடுஞ்செழியன்
   3. சேரன் செங்குட்டுவன்
   4. பாரி

30. பலர் கூடிக் கைகொட்டி ஆடும் ஒருவகை ஊரக ஆடற்கலை
   1. காவடி
   2. கும்மி
   3. கரகம்
   4. நடனம்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

30 x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அறிவியல் வளர்ச்சி, நாகரிக வளர்ச்சி போன்ற சிந்தனை மாற்றங்களுக்கு எது காரணமாக அமைந்தது?

2. பாரியின் அவைக்களப் புலவர் யார்?

3. "உன்னிடம் அறம் கேட்டு வந்திருக்கிறேன்". இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

4. இவ்வாண்டு, சில நாடுகளில் கோடை எரித்தது. இதில் வந்துள்ள ஆகுபெயர் எது?

5. நேற்று மழை பெய்ததால் வீதி எங்கும் வெள்ளம் ஓடியது. இத்தொடர்ச் சொல்லியத்தைத் தனிச் சொல்லியங்களாக எழுதுக.

6. மரபுச்சொற்றொடருக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

7. தரப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

பொதுவியல்: __________

வாணாள்: __________

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

1. வணிகம்: ______________________________

2. தொன்மை: ______________________________

3. அரங்கேற்றம்: ______________________________

4. நல்லாட்சி: ______________________________

5. இலையுதிர் காலம்: ______________________________

5x2 = 10 புள்ளிகள்

## 4 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தேனிருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல்,
சீனி யுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல்,
பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியேபோல்,
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள்போல்,
பள்ள மான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம்போல்,
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும்பயிலுவோம்!

- அழ. வள்ளியப்பா

1. நாம் எவற்றைத் தேடிப் பயில வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?

______________________________

2. வளம் நிறைந்த நாட்டினைத் தேடிச் செல்வோர் யாவர்?

______________________________

3. வெள்ளம் எந்த இடத்தினைப் பார்த்துப் பாயும்?

______________________________

4. கிளி பார்த்துச் செல்லும் சோலை எப்படிப்பட்டது?

______________________________

5. சீனியுள்ள இடத்தினைத் தேடி ஊருவது எது?

______________________________

5x2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

**தமிழ்:**

1. பல நாடுகள் பங்குகொள்ளும் ஒலிம்பிக் விளையாட்டு உலக ஒற்றுமையை வளர்க்கிறது.

2. உலகில் பரந்து வாழும் தமிழ் இளையோர் பல துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

3. நாம் எமக்குக் கிடைக்கும் ஓய்வுநேரத்தைப் பயனுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

4. புலம்பெயர் நாடுகள் பலவற்றில், ஆண்டுதோறும் தமிழர் விளையாட்டு விழாக்கள் நடைபெறுகின்றன.

5. பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டிகளாக இருக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

**வாழிடமொழி:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

5x2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. மாந்தரும் இயற்கையும்

2. பல்லவர்காலம்

3. சுற்றுலா வகைகளும் நன்மைகளும்
   உள்ளடக்கக் குறிப்புகள்:
   - கல்விச்சுற்றுலா / அறிவு வளர்ச்சி
   - தாயகச் சுற்றுலா / மகிழ்ச்சி
   - மறக்க முடியாத நினைவுகள்

4. தொலைக்காட்சி தன் கதை கூறல்.

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

இன்று விடுதலை பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. உலகிலுள்ள ஒவ்வோர் இனமும் தத்தமது உரிமைகளைப் பேணுவதில் கவனமாக இருக்கின்றது. தன் வீட்டில், தன் மண்ணில், தன் மொழியைப் பேசி, தன் இனத்துடன் வாழும் உரிமை ஒவ்வொரு மாந்தருக்கும் உண்டு. இவ்வுரிமைகள் பறிக்கப்படும்போது விடுதலை உணர்வு மேலோங்குகிறது. இவ்விடுதலை உணர்வானது, தம்மை அடக்குவோரை எதிர்த்துப் போராடும் ஒரு நிலையை உருவாக்குகிறது. இதுவே விடுதலைப் போராட்டமாகும். இன்று உலகில் பல போர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை அடக்கி ஆள முயல்கிறது. இந்த அடக்குமுறை, பல விளைவுகளை ஏற்படுத்தும் வன்முறைகளாக வெளிப்படுகிறது. இதனால், எண்ணில் அடங்காத அழிவுகள் ஏற்படுகின்றன. விடுதலை பெறும் உணர்வு என்பது மாந்தருக்கு மட்டுமல்லாமல் ஐந்தறிவு படைத்த விலங்குகளுக்கும் உண்டு. மாந்தநேயம் இல்லாத அடக்குமுறையாளர்கள் இருக்கும் வரை விடுதலைப் போராட்டங்களும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

1. உலகிலுள்ள ஒவ்வோர் இனமும் எதில் கவனமாக இருக்கின்றது?

   ______________________________

2. விடுதலை உணர்வு எப்போது மேலோங்குகிறது?

   ______________________________

3. இன்று எது பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது?

   ______________________________

4. இன்று உலகில் போர்கள் நடப்பதற்குக் காரணம் என்ன?

   ______________________________

5. யார் இருக்கும் வரை விடுதலைப் போராட்டங்கள் தொடரும்?

   ______________________________

5x2 = 10 புள்ளிகள்

2. மேடைப்பேச்சை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.

## மேடைப்பேச்சு

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம்! என் பெயர் அறிவன். நான் ஒன்பதாம் ஆண்டில் படிக்கிறேன். இம்மேடையில் இன்கலைகள் என்ற தலைப்பில் உரையாற்ற எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி! ஆடல், ஓவியம், சிற்பம், இசை, நாடகம் ஆகிய ஐந்தும் இன்கலைகள் என அழைக்கப்படுகின்றன. இக்கலைகள் மாந்தர் மனங்களை மகிழ்விக்கின்றன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர் தமிழரது கலைகளைப் பேணுவதில் மிக ஆர்வமாக இருக்கின்றனர். என் போன்ற இளையோர் தமிழரது கலைகளை அழியாமல் பாதுகாப்பர் என உறுதியாகக் கூறிக்கொண்டு எனது இச்சிற்றுரையை முடிக்கிறேன்.

நன்றி வணக்கம்!

1. இன்கலைகள் மாந்தர் மனங்களை மகிழ்விக்கின்றன. ( )
2. அறிவன் பத்தாம் ஆண்டில் படிக்கிறான். ( )
3. அறிவன் கல்வியைப் பற்றி உரையாற்றுகிறான். ( )
4. இளையோர் தமிழரது கலைகளைப் பாதுகாப்பர். ( )
5. ஆடல் இன்கலைகளுள் ஒன்று. ( )

5x1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |